கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்

1கொரிந்தியர் 1:30



# ஞான ஒலி

## இணைய வார இதழ்

ஞானம் 5 - ஒலி 41 | 09-10-2022

www.newwisdomministries.com



# அன்பே தலை சிறந்தது



# கெடுத்து, பட்டு, கெட்டு திருந்துவது புத்திசாலித்தனமல்ல...

அருட்பணி. சைமன் பீட்டர்

இயேசு கிறிஸ்துவில் பிரியமான எனதருமை ஞான ஒலி இணைய இதழின் வாசகப் பெருமக்களே, உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கங்கள்.

கடந்த செவ்வாயன்று இந்தியர்களாகிய நாம் அனைவரும் ஆயுத பூஜையை விமரிசையாகக் கொண்டாடினோம்.

நம் நல்வாழ்வுக்கும், உழைப்புக்கும் உதவுகின்ற கருவிகள், இயந்திரங்கள், வாகனங்கள் அனைத்தையும் நன்றாகக் கழுவி, மாலையும் குங்குமமும், சந்தனமும் இட்டு அவற்றுக்கு நன்றி சொல்கிறோம். நம் இந்தியக் கலாச்சாரத்தில் நாம் பயன்படுத்தும் அனைத்துக் கருவிகளுக்கும், அவை ஜடப்பொருளாக இருந்தாலும், அவற்றுக்கும் உயிர் உள்ளதைப்போல பாவித்து, அவற்றுக்கும் மனம் உண்டு, உணர்வு உண்டு என்று கருதி அவற்றுக்கு வருடத்திற்கு ஒருமுறை மரியாதையையும், நன்றியையும் செலுத்துகின்றோம். இது எவ்வளவு பெரிய மாண்புக்குரிய பண்பு என்பதை இந்த உலகமே வியக்கின்றது.

இந்தப் பழக்கம் அசோகச் சக்ரவர்த்தியின் ஆட்சிக் காலத்திலிருந்து கடைப்பிடிக்கப்பட்டு வரும் கலாச்சார விழாவாகும்.

ஒரு செய்தியை நாம் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். அந்த விழா எதற்காகக் கொண்டாடப்பட்டது, இந்த விழா கொண்டாடுவதன் உட்கருத்து என்னவாக இருந்தது, இப்போது இந்த ஆயுத பூஜையின் உள்ளர்த்தம் எப்படியுள்ளது என்பதை நாம் மீளவும் புரிந்து கொள்வது நல்லது.

இந்த ஆயுத பூஜை விழா ஒரு மனமாற்றத்தின் விழா. வன்முறை, ஆயுதக் கலாச்சாரம் ஒழியவும், அஹிம்சை கொண்டாடப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தவே இந்த விழா கொண்டாடப்படுகின்றது.

இவ்விழாவின் வரலாற்றுப் பின்னணியையும் சற்றுத் திரும்பிப் பார்ப்போம்.

கி.மு 304 முதல் 232 வரை இந்தியாவின் பெரும் பகுதி மௌரியப் பேரரசின் ஆட்சியின் கீழ் இருந்தது. அந்த அரச வம்சாவழியில் வந்தவர்தான் அசோகச் சக்கரவர்த்தி என்ற மாமன்னன். அவர் கி.மு 268 முதல் 232 வரை இந்தியாவை ஆண்டு வந்தார். அவர் போர் பிரியர். அவர் பிந்துசாரா என்ற மன்னரின் மகனாக பாடலிபுத்ராவில் பிறந்தார். அவர் இந்தியாவின் முழுமையையும் தன் ஆட்சிக்குட்படுத்தி ஆண்டு வந்தார். ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் வரை தன் ஆளுகைக்குள் கொண்டுவந்தார்.

கி.மு 260ல் கலிங்கத்தின் மீது படையெடுத்தார். அந்தப் போரில் ஒரு லட்சம் வீரர்கள் கொல்லப்பட்டார்கள், மேலும் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் பேர், நாடுகடத்தப்பட்டார்கள். அந்தப் போரில் அசோகர் வெற்றி பெற்ற பெருமிதத்தோடு தன் அரண்மனையில் வீற்றிருந்தார். தனது வெற்றியைக் கொண்டாடிக் கொண்டிருந்தார்.

அப்போது ஒரு புத்த பிக்கு அவரை சந்தித்து, மன்னா இந்தப் போரில் நீ தோற்று போய்விட்டாய், ஆனால் நீ வெற்றி மமதையில் குடித்து கும்மாளமிட்டுக் கொண்டிருக்கின்றாய் என்று சொன்னார். அதற்கு அசோகர், இல்லை நான் இந்தப் போரில் கலிங்கத்தை முற்றிலுமாக கைப்பற்றிவிட்டேன் மௌரியப் பேரரசின் எல்லைகள் விரிவடைந்துள்ளது என்று சொன்னார். இல்லை, மன்னா, நீ இப்போது கலிங்கப் போர்க் களத்திற்குப் போய் பார் என்று அந்த புத்த பிக்கு சென்னார், நீ இந்தப் போரில் தோற்றுப் போய்யுள்ளாய் என்று உனக்குத் தெரியும் என்று அவர் சொன்னதைக் கேட்டு அசோக சக்ரவர்த்தி போர்க் களத்திற்குப் போய் பார்த்த போது சிதறிக் கிடந்த போர் வீரர்களின் பிணங்களையும், லட்சக்கணக்கானோர் குற்றுயிரும் கொலையுயிருமாக வலியில் துடித்துக் கொண்டிருந்ததையம், இரத்தம் ஆறாய் ஓடிக்கொண்டிருந்ததையும், மரண ஓலத்தையும் கேட்டு, மனமுடைந்து போனார் அசோக மன்னன். தனது கொடூரமான மண்ணாசையால், எத்தனை உயிர்களைக் காவு கொண்டுள்ளது, உயிர்களையும், குடும்பங்களையும் சிதைத்துள்ளது என்பதை உணர்ந்து மனம் வெதும்பி அழுதார். தனது இரத்த வேட்கையின் அவலத்தை அறிந்து மனம் மாறினார்.

இனி ஒருபோதும் போர் புரிவதில்லை என்று முடிவெடுத்து, தன் நாட்டுக்குத் திரும்பி வந்து, தனது படைவீரர்களை அழைத்து அரண்மனையில் இருந்த அனைத்து போர்க் கருவிகளையும் ஒன்று சேர்த்து, அவற்றை இரத்தக் கறையின்றி கழுவி, ஓர் அறையில் போட்டு பூட்டி வைத்தார்கள். இனி இவை ஒருபோதும் இரத்த சிந்தப் பயன்படுத்தக் கூடாது என்று சட்டமியற்றி, ஊரறிய அறிவித்து, புத்த மதத்தை ஏற்று, அஹிம்சை வழியில் தனது வாழ்வை நடத்த ஆரம்பித்தார். அவர்தான் தன் ராஜ்யம் முழுவதும் புத்த மதத்தை பரப்பினார்.

போரின் கொடூரத்தை தவிர்த்து, அஹிம்சை, அன்பு ஒன்றே வேதம் என்று முடிவெடுத்த பத்தாம் நாளைத்தான் விஜய தசமி, என்று அன்றிலிருந்து இவ்விழா கொண்டாடபபடுகின்றது.

ஆயுதங்கள் வாழ்விக்கவும், வாழவைக்கவும் பயன்படுத்தவே உருவாக்கப்பட வேண்டும். அவை ஒருபோதும் பிறர் உயிர்போக்கப் பயன்படுத்தக் கூடாது என்ற கருத்தை வருங்ககாலச் சந்ததியினர் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இந்த விழா அன்றிலிருந்து கொண்டாடப்படுகின்றது.

இந்த விழா மனிதநேய விழா. எந்த மதத்திற்கும் உரிய விழா அல்ல. இது மானுட மாண்பை நமக்குக் கற்றுத் தரவே, போதிக்கவே கொண்டாடப்பட வேண்டும் இந்த விழா.

கி.மு 232 ல் அசோக சக்ரவர்த்தி தனது 72வது வயதில் இறந்தார். மண்ணாசை கொண்ட பேராசைக்காரனாக வாழ்ந்து அஹிம்சையின் பேராசானாக மரணித்தார். அவரின் மனமாற்றம் மானுடத்தின் பேரானந்தமாக மாறியது. அவர் ஒரு புனிதராகக் கொண்டாடப்பட வேண்டியர். **வாழ்க புனித அசோகர்.**

While others **SEARCH** for what they can **TAKE**,
a true **KING** searches for what he can **GIVE**



# விவிலியம் அறிவோம் – 59



அருட்பணி. ஆ. அலெக்ஸ் CMF

## மோசேயின் இரண்டாவது அழைப்பு

மோசேமிதியானில் தனது மாமனாரான இத்திரோவின் ஆடுகளை மேய்க்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது ஆண்டவர் அவரை அழைத்து எகிப்திற்கு அனுப்பியதை நாம் ஏற்கனவே பார்த்தோம். மோசேயும் ஆரோனும் எகிப்திற்கு வந்து இஸ்ரயேல் மக்களை ஒன்று கூட்டிப் பேசுகின்றனர். பார்வோனிடம் சென்று ஆண்டவரை வழிபட இஸ்ரயேல் மக்களை பாலைவனத்திற்கு அனுப்புமாறு கேட்கின்றனர். பார்வோன் அவர்களை அனுப்ப மறுக்கிறான்; அவர்களின் வேலைப்பளுவை அதிகரிக்கச் செய்கிறான். இதனால் இஸ்ரயேல் மக்கள் இன்னும் அதிகமான துன்பங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். மோசேயின் அழைப்பை விப 3-4 பிரிவுகளிலும், மோசே எகிப்திற்குச் சென்று பார்வோனிடம் பேசுவதையும் அதன் எதிர்வினைகளையும் 5:1 முதல் 6:1 வரையுள்ள பகுதிகளிலும் நாம் வாசிக்கிறோம். இந்தப் பாடங்கள் அனைத்தும் யாவே மரபு மற்றும் ஏலோகீம் மரபுகளிலிருந்து வந்தவை. இதற்கு மாறாக விப6:2 முதல் 7:7 வரையுள்ள பாடங்கள் குருக்கள் மரபு ஆசிரியரால் பதிவுசெய்யப்பட்டவை. இப்பகுதியில் மோசே எகிப்தில் ஆண்டவரால் அழைக்கப்படுதல் மற்றும் மோசே மற்றும் ஆரோனின் வழிமரபுப் பட்டியல் ஆகியவை உள்ளன.

மோசே எகிப்தில் இருக்கும்போது ஆண்டவரால் அழைக்கப்படுவது மோசேயின் இரண்டாவது அழைப்பு என அறிஞர்களால் கருதப்படுகிறது. மோசேயின் முதல் அழைப்பில் காணப்படும் பல சிறப்புக்கூறுகள் மோசேயின் இரண்டாவது அழைப்பிலும் காணக்கிடக்கின்றன. உதாரணமாக, பெருஞ்சுமையினால் வருந்துகின்ற இஸ்ரயேல் மக்கள் ஆண்டவரை நோக்கி குரலெழுப்புகின்றனர். அவர்களின் அழுகுரலை ஆண்டவர் கேட்கிறார். அவர்களுக்கு பதில் தருகிறார் (6:5), அடிமைத்தனத்திலிருந்து அவர்களை மீட்பதற்கு வாக்குறுதி தருகிறார்(6:6-8),ஆண்டவர் தனது வாக்குறுதியை நிறைவேற்றும் வண்ணம் மோசேயை அழைக்கிறார் (6:9-11), மோசே அழைப்பை ஏற்கத் தயங்குகிறார்(6:12, 30), மோசேயின் தயக்கத்தை சமாளித்து அவரை எகிப்திற்கு அனுப்புகிறார் (7:1-5) போன்ற கூறுகளைக் காணலாம். மோசேயின் இரண்டாவது அழைப்பு இதற்குமுன் நடந்தவை அனைத்தையும் கணக்கில் எடுத்துக்கொள்கிறது. அதே வேளையில் இனிநடக்க இருப்பவைகளை வாசகர்கள் அறிந்துகொள்ள அவர்களைத் தயாரிக்கிறது. இந்த இரண்டு அழைப்புகளுக்கும் இடையில் வருகின்ற பகுதி(4:18-6:1)மோசே ஒரேபு மலையில் அழைக்கப்பட்டபிறகு எகிப்திற்கு வந்து தனது பணியைத் தொடங்குவதைக் குறிப்பிடுகிறது. குருக்கள்மரபு ஆசிரியர்களால் பதிவு செய்யப்படுகின்ற மோசேயின் இரண்டாவது அழைத்தல் ஆண்டவர் குலமுதுவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளுக்கும் இஸ்ரயேல் மக்களை விடுவிக்க அவர் எடுக்கும் முயற்சிகளுக்கும் தொடர்பு இருப்பதைக் காட்டுகிறது. குலமுதுவர்களுடன் ஆண்டவர் செய்த உடன்படிக்கை எப்போதும் அவரது நினைவில் உள்ளது. மக்கள் ஆண்டவருக்கு பிரமாணிக்கமில்லாதவர்களாக இருந்தாலும், கடவுளுக்கு எதிராக அவர்கள் செயல்பட்டாலும், ஆண்டவர் ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கையை மறக்கவில்லை.

மோசேயின் இரண்டாவது அழைத்தல் நிகழ்வில் விப 6:6-8 வரையுள்ள இறைச்சொற்றொடர்கள் மிகவும் முக்கியமானவை. இப்பகுதியில் கடவுள், நீ இஸ்ரயேல் மக்களிடம் சொல்லவேண்டியது; நானே ஆண்டவர். எகிப்தியரின் பாரச் சுமைகளை நான் உங்களிடமிருந்து அகற்றுவேன். அவர்கள் உங்களை அடிமைப்படுத்துவதிலிருந்து விடுவிப்பேன். ஓங்கிய கையாலும் மாபெரும் தண்டனைத் தீர்ப்புகளாலும் நான் உங்களுக்கு மீட்பளிப்பேன். உங்களை நான் என் மக்களாகத் தேர்ந்தெடுப்பேன். உங்களுக்குக் கடவுளாக நான் இருப்பேன். எகிப்தியர் சுமத்திய பாரச் சுமைகளை அகற்றி உங்களை விடுவித்த உங்கள் கடவுளாகிய

ஆண்டவர் நானே என்பதை அப்போது நீங்கள் அறிந்து கொள்வீர்கள். ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் நான் கொடுப்பதாக வாக்களித்த அந்த நாட்டிற்கு நான் உங்களைக் கூட்டிக்கொண்டு செல்வேன். அதை உங்களுக்கு உரிமைச் சொத்தாகக் கொடுப்பேன். நானே ஆண்டவர்! எனக் கூறுகின்றார். இப்பகுதியில் வருகின்ற சிலகருத்துக்களையும் சொற்றொடர்களையும் ஆழ்ந்து ஆய்வு செய்வது அவசியம். இஸ்ரயேல் மக்கள் எகிப்தியர் தங்கள் மீது சுமத்திய பாரச்சுமையால் அல்லல்படுகிறார்கள். அடிமைத்தனத்தில் உழன்று கொண்டிருக்கும் இஸ்ரயேல் மக்களினம் இவ்வுலகிலிருந்து ஒழிக்கப்படும் அபாயத்தில் உள்ளது. இந்தச் சூழ்நிலை கடவுளின் தலையீட்டிற்கு உகந்ததாக உள்ளது. எனவேதான் கடவுள் அவர்களை விடுவிப்பதற்காக இறங்கிவருகிறார்.

மக்கள் குரலெழுப்பி அழுவதற்கும் கடவுள் அவர்களைக் காப்பாற்றுவதற்கும் ஒருதொடர்பு உண்டு. குரலெழுப்பி அழுவதில் அர்த்தம் உண்டு. அதற்கொரு முக்கியத்துவம் உண்டு. ஆபேலின் இரத்தம் மண்ணிலிருந்து கடவுளை நோக்கி கதறியது (தொநூ 4:10); கடவுள் அதற்குச் செவிசாய்க்கிறார். ஆபேலைக் கொன்ற காயீனைத் தண்டிக்கிறார். சோதோம் கொமோராவுக்கு எதிராக பெருங் கண்டனக்குரல் எழும்பியுள்ளது (தொநூ 18:20) என ஆண்டவர் அபிரகாமுக்குக் கூறுகிறார்; அதற்குத் தண்டனைத் தீர்ப்பாக சோதோம் கொமோரா நகர்களை அழிப்பதற்கு தீர்மானிக்கிறார். அதைப்போலத்தான் அடிமைத்தனத்தால் அல்லல்படுகின்ற இஸ்ரயேல் மக்கள் எழுப்பியகுரலையும் கடவுள் கேட்கின்றார். அவர்களை விடுவிப்பதற்கான தனது திட்டத்தை செயல்படுத்துகின்றார். எப்போதெல்லாம் கடவுளை நோக்கி மக்கள் குரலெழுப்பி முறையிடுகிறார்களோ அப்போதெல்லாம் கடவுள் மக்களை காப்பதற்கு இறங்கி வருகிறார். இஸ்ரயேல் மக்கள் கடவுளை நோக்கி குரலெழுப்பும்போது அந்தக் கடவுள் யார் என்பது அவர்களுக்குத் தெரியாது; பொதுவாகத் தான் கடவுளை அழைக்கிறார்கள். ஆண்டவரும் அவர்களுக்கு உதவும் விதத்தில் மோசேயை அழைத்து அனுப்புகிறார்.

ஆண்டவர் மோசேயுடன் பேசுகின்ற வார்த்தைகள் குருக்கள் மரபு ஆசிரியரால் நாடு கடத்தப்பட்டு பாபிலோனில் வாழ்ந்த மக்களுக்காகப் பதிவு செய்யப்பட்டவை. இவை கி.மு. ஆறாவது நூற்றாண்டில் இறைவாக்கினர்கள் பயன்படுத்திய மீட்புத் திருவுரை என்ற இலக்கிய வகையைச் சார்ந்தவை. இந்த வார்த்தைகள் இஸ்ரயேல்



மக்களுக்கு நம்பிக்கையை அளிக்கின்ற வார்த்தைகள்;. அவர்கள் நம்பிக்கையில் வளர்வதற்கு விதைக்கப்பட்ட விதைகள் எனக் கூறலாம். தீர்ப்பிட்டு தண்டனை வழங்கும் கடவுள்தான் மீட்பளிக்கும் கடவுளாகவும் உள்ளார் என்பதை இந்த வரிகள் வெளிப்படுத்துகின்றன. இந்த வார்த்தைகள் வழியாக குருக்கள் மரபு ஆசிரியர் முதல் விடுதலைப் பயணத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு புதிய பார்வைக்கு வித்திடுகின்றார். இஸ்ரயேல் மக்கள் இன்னும் எகிப்தில் அடிமைத்தனத்தில் அல்லல்படுவதாகவே அவர் கருதுகின்றார். அவ்வாறு அல்லல்படும் மக்களுடன் கடவுள் பேசுகின்றார். அவர்களை மீட்பதற்காக செயல்படப்போவதாக உறுதி கூறுகின்றார். இவ்வாறு எழுதுவதன் வழியாக குருக்கள் மரபு ஆசிரியர் வரலாறு மீண்டும் எழுதப்படுகிறது என்ற உணர்வைக் கொடுக்கின்றார்.

குருக்கள் மரபிலிருந்து வருகின்ற மோசேயின் இரண்டாவது அழைத்தல் நிகழ்வில் சில தொடர்ச்சிகளையும் சில தொடர்ச்சியின்மைகளையும் பார்க்கிறோம். மோசேயிடம் பேசுகின்ற கடவுள் எங்கிருந்தோ திடீரெனத் தோன்றிய கடவுளல்ல. மாறாக குலமுதுவர்களுக்குத் தோன்றி அவர்களுடன் பேசிய கடவுள்; குலமுதுவர்களை பாதுகாத்து, வழிநடத்தி அவர்களுடன் உடன்படிக்கை செய்த கடவுள். கடவுள் குலமுதுவர்களுடன் பேசியபோது யாவே அல்லது ஆண்டவர் என்ற தனது பெயரை அவர்களுக்கு வெளிப்படுத்தவில்லை. மாறாக எல்லாம் வல்ல கடவுள் அல்லது மலைகளின் கடவுள் என்ற பொருள் கொண்ட

எல் சட்டாய் என்ற பெயரில் அவர்களுடன் பேசினார். இப்போது யாவே அல்லது ஆண்டவர் என்ற உண்மையான பெயரை மோசேக்கு வெளிப்படுத்திப் பேசுகிறார். மோசேயுடன் ஆண்டவர் பேசுகின்ற வார்த்தைகள் அனைத்தும் இஸ்ரயேல் மக்களின் துன்பங்களைப் போக்குவதையே மையமாகக் கொண்டுள்ளன. குருக்கள் மரபைப் பொறுத்தவரை கடவுள் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கைதான் முக்கியமான உடன்படிக்கை. கடவுள் ஆபிரகாமுடன் உடன்படிக்கை செய்தபோது கொடுத்த வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. எனவே அவற்றை நிறைவேற்றுவதுபற்றிய உரையாடல்தான் இங்கேமுக்கியத்துவம் பெறுகிறது.

இப்பகுதியில் ஓங்கிய கையாலும் மாபெரும் தண்டனைத் தீர்ப்புகளாலும் நான் உங்களுக்கு மீட்பளிப்பேன் என்கிறார் ஆண்டவர். இச்சொற்றொடர் எகிப்தில் பார்வோன்களின் வல்ல செயல்களை வெளிப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டது. எகிப்தியர்கள் மத்தியில் மிகவும் பிரபல்யமான சொற்றொடர் இது. இப்போது ஆண்டவருடைய ஓங்கிய கைகளால் பார்வோன் பாதிக்கப்பட இருக்கிறான். இச்சொற்றொடர் வழியாக ஆண்டவர் ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குறுதியும் நிறைவேவற்றப்படுகிறது. சுருக்கமாகக் கூறினால் ஓங்கிய கை என்ற சொற்றொடரை கடவுள் ஆணையிட்டுக் கூறுவதை வெளிப்படுத்துகின்ற ஒரு சைகையாகக் கருதலாம். கடவுளைவிட வல்லமைமிகுந்தவர் யாருமில்லை; எனவே கடவுள் வேறு யார்மேலும் ஆணையிட்டுக் கூறமுடியாது. இன்னும் இப்பகுதியில் வருகின்ற நானே ஆண்டவர் என்ற சொற்றொடர் குருக்கள் மரபுக்கு உரித்தான ஒரு உன்னதமான சொற்றொடர்.

இது அரச வம்சத்தினர் பயன்படுத்துகின்ற ஒரு சொற்றொடர் மரபைக் குறிக்கிறது. உதாரணமாக, பண்டைய காலத்தில் அரசர்கள் தங்கள் சாதனைகளை கல்வெட்டுகளில் பொறிக்கும்போது இப்படித்தான் தொடங்குவர். குருக்கள் மரபு ஆசிரியர் இச்சொற்றொடரை ஆண்டவரை அறிமுகப்படுத்துவதற்காகக் கையாளுகின்றனர். இப்பகுதி ஒருவழிபாடாகவும் உள்ளது. வழிபாட்டின் தொடக்கத்தில் சுய அறிமுகம் செய்வதற்காக இச்சொற்றொடர் பயன்படுத்தப்படுகிறது. நான் உங்களோடு இங்கே இருக்கிறேன்; உங்களுக்காகச் செயல்படுகிறேன். நீங்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்ற பொருளில் இச்சொற்றொடரைப் புரிந்துகொள்ளலாம். அறிமுகச் சூத்திரமாகப் பயன்படுத்தப்படும் இச்சொற்றொடர் இஸ்ரயேல் மக்களிடமிருந்து ஒரு பதிலையும் எதிர்பார்க்கிறது. குருக்கள் மரபில் வருகின்ற இறையியலாளர்களின் சிந்தனையில் இஸ்ரயேல் சார்பாக கடவுள் தலையிடுவதென்பது கடவுள் தன்னை வெளிப்படுத்துவதன் அடையாளமாகும்.

ஆண்டவர் கூறியவை அனைத்தையும் மோசே இஸ்ரயேல் மக்களிடம் எடுத்துச் சொல்கிறார். ஆனால் இஸ்ரயேல் மக்களின் மன ஏக்கமும் வேலையின் கொடுமையும் அவர்களை முடக்கிப்போடுகின்றன. அவர்கள் மோசேக்குச் செவிகொடுக்கவில்லை. எனவே ஆண்டவர் மோசேயை பார்வோன் மன்னனிடம் சென்று இஸ்ரயேல் மக்களை அனுப்பிவிடும்படி நீ அவனிடம் போய்ச் சொல் என்று கூறியபோது மோசே ஏற்க மறுக்கிறார். இஸ்ரயேல் மக்களே எனக்குச் செவிசாய்க்காதிருக்க, பார்வோன் எவ்வாறு எனக்குச் செவிசாய்க்கப் போகிறான்? நானோ பண்பட்ட உதடுகள் இல்லாதவன் என பதில் கூறுகிறார். ஆண்டவர் அவருக்கு உறுதியளிக்கிறார். ஆரோனை அவருக்குத் துணையாக அனுப்புகிறார். பார், நான் உன்னைப் பாரவோனுக்குக் கடவுளாக வைத்துள்ளேன். உன் சகோதரன் ஆரோன் உன் வாக்கினனாக இருப்பான். நான் உனக்குக் கட்டளை இடுவதையெல்லாம் நீ எடுத்துச் சொல்வாய். பார்வோன் தன் நாட்டினின்று இஸ்ரயேல் மக்களைப் போகவிடும்படி அவனிடம் உன் சகோதரன் ஆரோன் பேசுவான் எனக் கூறுகிறார்.

இனி மோசே தனியாகச் செயல்பட வேண்டியதில்லை. அவருக்குத் துணையாக ஆரோன் இருப்பார். அவர்களின் வழியாக ஆண்டவர் இஸ்ரயேல் மக்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து வெளியே கொண்டுவருவார். ஆண்டவரின் இச்செயல் எகிப்தியர் ஆண்டவரை யார் என அறிந்துகொள்ளச் செய்யும். விப 7:3 இல் நான் பார்வோனின் மனத்தைக் கடினப்படுத்துவதோடு எகிப்து நாட்டில் என்னுடைய அடையாளங்களையும் அருஞ்செயல்களையும் பெருகச் செய்வேன் என்கிறார் ஆண்டவர். இச்சொற்றொடரில் மனம் ; என வருகின்ற சொல்லை இதயம் எனவும் மொழி பெயர்க்கலாம். எபிரேயச் சிந்தனையில் இதயம்; சிந்தனைகள் மற்றும் விருப்பங்களின் பிறப்பிடமாகக் கருதப்பட்டது.விடுதலைப் பயணம் நூலில் பார்வோனின் இதயத்தை அல்லது மனத்தைக் கடினப்படுத்துவது மூன்று வழிகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. 1) பார்வோனின் இதயம் கடினப்படுத்தப்படுதல் (7:13, 14, 22; 8:15; 9:7, 35); 2) பார்வோன் தன் இதயத்தைக் கடினப்படுத்துதல் (8:11, 28); 3) ஆண்டவர் பார்வோனின் இதயத்தைக் கடினப்படுத்துதல் (7:3; 9:12; 10:1, 20, 27). விடுதலைப் பயணம் நூலில் பயன்படுத்தப்படும் இந்தக் கோட்பாடு மனித சுதந்திரத்தையும் கடவுளின் வல்லமையையும் வெளிப்படுத்துவதாக உள்ளது.



ஞாயிறு

# மறையுரை

## பொதுக்காலம் 28-ம் ஞாயிறு

09-10-2022

முதல் வாசகம் - 2 அரசர்கள் 5:14-17
இரண்டாம் வாசகம் - 2 தீமொத்தேயு 2:8-13
நற்செய்தி வாசகம் - லூக்கா 17:11-19

மறையுரை வழங்குபவர்




அருட்பணி. **ஸ்டீபன் கஸ்பார்**
பங்குத்தந்தை
திருமுழுக்கு அருளப்பர் ஆலயம்
காமலாபுரம், திண்டுக்கல் மறைமாவட்டம்


### ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள் ஏனெனில் அவர் நல்லவர், என்றென்றும் உள்ளது அவரன்பு

இறை இயேசுவிலே எனக்கு மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே. நம் ஆண்டவர் இயேசுவுக்கு நன்றி சொல்வது நன்றாய்ப் பிடிக்கும். நன்றி சொல்வோரையும், பகழுபவர்களையும் நம் ஆண்டவர் வாழ்வாங்கு வாழ வைக்கிறார். இறைவனிடமிருந்து வரங்களைப் பெற்றி வளமாக வாழ, இறைவனுக்கு நன்றி சொல்லி வாழ அழைக்கும் நற்செய்தியை உள்வாங்கியுள்ளோம்.

அன்பானவர்களே, நன்றி சொல்பவர்களும், புகழுகின்றவர்களும் கடவுளை நம்பி வாழ்வதால், அவரை நம்புகிறவர்களை இறைவன் கைவிடுவதில்லை. எனவேதான், பவுல், எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறுங்கள் (1 தெச 5/18) என்று கூறுகிறார். மேலும் எபி 13/15 ல் எப்போதும் நாம் கடவுளுக்கு புகழ்ச்சிப் பலியினை செலுத்துவோமாக என்றும் சொல்லுகிறார்.

நன்றியுள்ள மனம் வாழ வைக்கும் , குழைந்து குழைந்து வாலை ஆட்டிக் கொண்டு வருகின்ற நாய் நன்றிக்கு ஓர் அடையாளம். அதன் நன்றியுள்ள மனமே அதனை வாழ வைக்கிறது. நன்றியுள்ள மனம் மேலும் பல நன்மைகளை அடையும். நன்றி பாராட்டும் மனிதர்களுக்கு மேலும் மேலும் உதவிட நமக்குத் தோன்றும். நன்றியுடைய ஒரு மனிதனை முழுமையாக வெளிப்படுத்தும். நாம் நம் இறைவனுக்கும், அண்டசராசரத்திற்கும் நன்றியுள்ளோராய் வாழ்கிறோமா? சிந்திப்போம்.

இஸ்ராயேல் மக்கள், நம் மூதாதையர் கொண்டாடிய பாஸ்கா விழாவே, நன்றி விழாதான். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து யாவே அவர்களை விடுவித்ததற்கு ஆண்டிற்கு ஒருமுறை நன்றி சொல்லும் விழாவாகும். பாலைவனப் பயணத்திலே பல நேரங்களில் நன்றி மறந்தவர்களாய் வாழ்ந்ததைக்கடவுள் சாடுவதைப் பார்க்கின்றோம்.

ஆம் அன்பான இறைச் சமூகமே. நம்மில் எத்தனை பேர் நம் பெற்றோர்களுக்கு நன்றியுடையோராய் இருக்கிறோம். நம்மை வளர்த்து ஆளாக்கிய பெற்றோரை நம் வீட்டில் உறுப்பினராய்க் கொள்ளாது, முதியோர் இல்ல உறுப்பினராய் ஆக்குகிறோம் இல்லையா? படித்த பள்ளிக்கும் கற்றுத்தந்த ஆசானுக்கும் நன்றியுடையோராய் இருக்கிறோமா?

**நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**
**அன்றே மறப்பது நன்று**

என்று திருவள்ளுவர் சொல்லுகிறார்.

இன்றைய முதல் வாசகத்திலே இறைவாக்கினர் எலிசாவிடம் சிரியா நாட்டுத் தொழுநோயாளி நாமான் வந்து குணம் பெறுகிறார். நலமடைந்ததற்கு நன்றியாக எலிசாவிற்கு அன்பளிப்புத தருகிறார். ஆனால் எலிசாவோ, அன்பளிப்பை வாங்க மறுக்கிறார். பிறஇனத்தவரான நாமான், இஸ்ரயேலின் கடவுள் ஒருவரே உண்மையான கடவுள் என்று தன் நன்றியை அறிக்கையிடுவதை நம்மால் காணமுடிகிறது. இஸ்ரயேலின் கடவுளை

அவர் ஏற்றுக் கொண்டதன் வெளிப்பாடாக நம்மால் பார்க்க முடிகிறது.

இன்றைய நற்செய்தியிலே வருகிற பத்துத் தொழிநோயாளிகள், யூதரகளும், சமாரியர்களும் ஊருக்கு வெளியே உறவுகள் நட்புகளை இழந்து, ஒதுக்கி வைக்கப்பட்டு, நடைப்பிணங்களாகத் தம் வாழநாளை சபித்துக் கொண்டு கிடக்கிறார்கள். அவ்வழியே சென்ற இயேசுவை நோக்கி, ஐயா இயேசுவே, எங்களுக்கு இரங்குமென்று கூவி அழைக்கிறார்கள். கருணையே உருவான கடவுளின் மகன் இயேசு பத்துப்பேருக்கும் நலம் கொடுத்து அனுப்பி, குருக்களிடம் காட்டி நலம் பெற்றதற்கான அத்தாட்சி பெற்று இழந்த உறவுகைச் சந்திக்க வாய்ப்பளிக்கிறார். பத்துப் பேரும் நலம் பெற்றதற்கான அத்தாட்சி பெறுகிறார்கள். நலம் கொடுத்த நல்லவருக்கு 9 பேர் நன்றி சொல்ல மறந்தனர். ஒருவன், சமாரியன் ஓடோடி வந்து அவரைப் பற்றிக் கொண்டு காலில் விழுந்து நன்றி சொன்னான் என்று பார்க்கிறோம். இயேசு மற்ற நலம் பெற்ற 9 பேர் எங்கே? இந்த அந்நியனைத் தவிர வேறு எவரும் வரக் காணோமே? என்று கேட்கிறார். நலம் கொடுத்துத் தன் பாகுபாடற்ற அன்பை வெளிப்படுத்திய ஆண்டவர் இயேசு நலம் பெற்றவரிடம் நன்றியை எதிர்பார்ப்பது தவறில்லை. நல்ல சமாரியன் தன்னுடைய விசுவாசத்தை நன்றியால் வெளிப்படுத்துவதை பாராட்டுகிறார் இயேசு ஆண்டவர்.

நாம் உண்மைக் கிறிஸ்வர்களென்றால் நாம் ஒவ்வொரு நாளும் கடவுளுக்கு நன்றி சொல்லவேண்டும். நற்கருணை என்ற சொல்லுக்கு நன்றியறிதல் என்பது பொருள். ஒவ்வொரு திருப்பலியிலும் கடவுளைப் போற்றி, நன்றி கூறுகிறோம். இவர் வழியாக இவரோடு இவரில் என்ற இறுதிப் புகழுரை அது நன்றிப் புகழுரை. ஒவ்வொரு நாளும் கடவுளை நாம் போற்றிப் புகழ்கூறி நன்றி சொல்லி, நன்றிப் பலியில் பங்கு பெறுவோம். எனவேதான் திருப்பாடல் 118 ஆனது ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள் ஏனெனில் அவர் நல்லவர் என்றென்றும் உள்ளது அவர் இரக்கம் எனப்பாடுகிறது.

நன்றி கூறி செபிப்போம். எங்கள் அன்பான நல்ல ஆண்டவரே, நலம் பெற்ற 10 தொழுநோயாளிகளில் நலம் பெற்றதை எண்ணிப் பார்த்து நன்றி சொல்ல ஓடோடி வந்த அந்நியன், யூதரல்லாத சமாரினைப் பாராட்டிப் புகழ்ந்தவரே, நன்றியோடு உம்மை இன்று துதிக்கிறோம். இந்த அருமையான நாளைக் கொடுத்து, பெற்ற நன்மைகட்கு நன்றி சொல்லவேண்டுமென்ற நல்ல பண்பை இன்று எங்களுக்கு பத்துத் தொழுநோயாளர் வழியாகக் கற்றுக் கொடுததற்கு நன்றி. சிறிதோ, பெரியதோ, நாங்கள் பெறும் நன்மைகளுக்கு நன்றி சொல்லக் கற்றுக் கொடுத்த உமக்கு எம் இதய நன்றி. ஒவ்வொரு நாளும், உம்மையே பலி வழியாய்த் தந்து, காப்பதற்கு நன்றி. உம்மைப் புகழ, நன்றி சொல்லி நல்லவர்களாய், நன்றியுள்வர்களாய் வாழ எங்களுக்கு வழிகாட்டும். எங்களை வாழ வையும்.

- ஆமென்





# பொதுக்காலத்தின் 28-ம் ஞாயிறு

2 அர. 5:14–17, 2 தீமோ. 2 : 8–13, லூக். 17:11–19

**09-10-2022**




பா. சேவியர்
பட்டாபிராம், சென்னை.


## திருப்பலி முன்னுரை

கடவுளிடமிருந்து பெற்ற நன்மைகளை நன்றியோடு நினைத்துப் பார்த்து அவரை போற்றிப் புகழ வருகை தந்துள்ள அன்பு இறை மக்களே உங்கள் அனைவரையும் பொதுக் காலத்தின் 28–ஆம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

நாம் இறைவனிடமிருந்து எண்ணற்ற வரங்களை பெற்று வளமுடன் வாழவும், அதற்காக இறைவனுக்கு நன்றி சொல்லவும், இன்றைய திருவழிபாடு நம்மை அழைக்கிறது. கடவுளைப் போற்றி அவருக்கு நன்றி சொல்லி வாழ்வது தகுதியும் நீதியுமாகும் என்ற சிந்தனையை மேம்படுத்த நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

இன்றைய வார்த்தை வழிபாடு இறை மனிதர்களின் தரம் வாய்ந்த வாழ்வு நெறியையும், நன்றியையும் அதன் மேன்மையையும் எடுத்துரைக்கின்றது. நல்நோக்கத்தோடு நற்செயல் புரிபவர்கள் பிரதிபலனை எதிர்பார்க்க மாட்டார்கள். கொடுப்பதில் வல்லவர்கள் கடவுளிடமிருந்து வாழ்வை வரமாகப் பெறுகிறார்கள் என்பதையும், செய்நன்றி மறவாத மனிதருக்கு இறையாசீர் அபரிமிதமாகக் கிடைக்கிறது என்பதையும் வலுவாக விரிவாக எடுத்துரைக்கிறது.

நன்றி செலுத்துவது வாழ்வின் தலையாய கடமையாகும். இறைவன், அன்றாடம் நமக்கு வழங்கும் கொடைகளுக்காக நன்றி கூறுவோம். நமது பிறப்பு ஒரு கொடை, நமது வாழ்வு ஒரு கொடை, மீட்பு ஒரு மாபெரும் அருங்கொடை. இவை அனைத்திற்கும் நன்றி கூறுவோம்.

நன்றி உள்ளவர்களாய் வாழும்போது உறவுகள் வளர்கின்றன என்பதை உணர்ந்து நன்றி மனம் கொண்டவர்களாய், இறைவனிடமிருந்து பெற்ற அருளை மற்றவரின் நல்வாழ்விற்காய் பயன்படுத்தும் இறைமக்களாய் வாழ இத்திருப்பலியில் இறையருளை வேண்டுவோம்.

## முதல் வாசக முன்னுரை

சிரிய நாட்டின் படைத்தலைவனான நாமான் தன்னை பீடித்திருந்த தொழுநோயிலிருந்து இறைவாக்கினர் எலிசாவால் குணமானது பற்றியும், குணமான நாமான் இறைவனை முழுமனதோடு ஏற்றுகொண்டது பற்றியும், இன்றைய முதல் வாசகம் எடுத்துரைக்கின்றது. கீழ்ப்படிதலும், நன்றியும் வாழ்வின் இரண்டு கண்கள் என்பதை எடுத்துரைக்கும் இவ்வாசகத்திற்கு உள்ளம் திறந்து செவிமடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

மறைப் பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்த தீமோத்தேயு தன் பணி வாழ்வில் எதிர்படும் இடர்பாடுகளை, துன்ப துயரங்களைக் கண்டு துவண்டுவிடாமல் தொடர்ந்து பணிபுரிய அவருக்கு தூய பவுலடிகள் கூறும் அறிவுரைகள் இன்றைய இரண்டாம் வாசகமாக அருளப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்துவுக்காக எதையும் எதிர்கொள்ளும் மன நிலையை வலியுறுத்தும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

1) அருளும் தூய்மையும் நிறைந்த தந்தையே இறைவா, நற்செய்திப் பணிக்காய் தம்மையே முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட எம் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள் அனைவருக்கும், உறுதியான விசுவாசத்தையும், எத்தகைய இடர்பாடுகள் வந்தாலும் அவற்றை எதிர்கொள்ளும் மன வலிமையையும் தாரும். காலத்திற்கேற்ப இறையாட்சி பணிகளை புதுப்பித்துக்கொண்டு புது உத்வேகத்துடன் பணி புரியும் ஆற்றலையும், ஆரோக்கியத்தையும் நிறைவாக அவர்களுக்கு தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2) தலைவர்களுக்கெல்லாம் ஒப்பற்ற தலைவரான எம் இறைவா, எங்கள் நாட்டின் அரசியல் தலைவர்கள், அதிகாரிகள், அரசு ஊழியர்கள் அனைவரையும் உம் திருப்பாதம் சமர்ப்பிக்கின்றோம். அவர்கள் உம்மைப்போல் நேர்மையோடும், நடுநிலையோடும், நீதியோடும், மக்கள் நலனையும், நாட்டு வளத்தையும் மட்டுமே கருத்தில் கொண்டு பணியாற்றிட அவர்களுக்கு நல்ல மனதை தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) உயிருக்கும் அன்புக்கும் ஊற்றான இறைவா, நலம் பெறுதல் மீட்புக்கு அடையாளமல்ல. நன்றி கூறலே மீட்பின் அடையாளம் என்பதை நாங்கள் முழுமையாக உணர்ந்து வாழவும், தொழு நோய் நீங்கி நலமடைந்த நாமானைப்போல் சமாரியனைப்போல் நன்றி உள்ளவர்களாய், நன்றி மனம் கொண்டவர்களாய் வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) எங்கள் தாயும் தந்தையுமான இறைவா, விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவரே நாங்கள் வாழ்வதும் இயங்குவதும் இருப்பதும் உம்மால் தான் என்பதை நன்றியோடு நினைவு கூர்கிறோம். எம் குடும்பங்களில் உள்ள அனைவரும் வார்த்தையால் மட்டுமல்ல செயலாலும் உமது திருவுளத்தை நிறைவேற்றி வாழவும், சிறப்பாக ஏழைகள் மீது அக்கறை கொண்டு அவர்களது நல்வாழ்வுக்காக உழைக்கவும், எங்கள் வாழ்வு பிறர்க்கு எடுத்துக்காட்டாக அமையவும் அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.



## எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை இயற்றிய இரட்சணிய மனோகரம்



**பஞ்சி நானொரு பாவியேன்**
**தஞ்சம் உன்னிரு தாளையா**
**அஞ்ச வென்றருள் வாய்பரன்**
**மஞ்ச னே மனு வேலனே**

இயேசுவே! இறைவனின் மைந்தனாக மண்ணுலகில் அவதரித்தவரே! என்னை விட்டு நீங்காமல் நிறைந்திருப்பவரே! உயர்வான பொருளானவரே! நான் காற்றால் அலைக்கலிக்கப்படும் பஞ்சுபோல் எளியவன். மனத்தில் குற்றம் நிறைந்தவன். உம் திருவடிகளே நான் அடைக்கலமாகின்ற இடம். இவ்வுலக வாழ்வில் துன்பங்களைக் கண்டு பயம் கொள்ள வேண்டாம் என எனக்கு நீவிரே சொல்லியருள வேண்டும்.



# திருக்குறள் வழங்கும் சமூக நெறி



சிந்தனையாளர்
அருட்சகோதரி. **ஜெஸிந்தா ஜான்சன்** FSPM

## குறள் –14

**ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்
வாரி வளங்குன்றிக் கால்**

### குறள் விளக்கம்

மழை என்னும் வருவாய் வளம் குன்றிவிட்டால் உழவரும் ஏர் கொண்டு உழ மாட்டார்.

### சிந்தனை

புயல்காற்று இயற்கைக்கு இடையு+று செய்யும் பெருங்காற்று என்று சொல்வோம். ஆனால் காற்றோடு இணைந்த மழை புயலாகும். இடி, மழை காற்று, பெருங்காற்று இப்படி பல்வேறு அர்த்தங்களை கொண்டது இந்த காற்று பெருமழை என்று அர்த்தமாகும். பெருமழையால் நிலம் செழிக்கும் 'வாரி பெருக்கி' அதாவது 'உனது வளத்தை பெருக்க வேண்டும்' என்று 512வது குறளில் வள்ளுவரே கூறியுள்ளார்.

நல்ல வருவாய் கிடைக்கும் தொழிலையே மக்கள் விரும்புவர். வருவாய் குன்றி போனது என்றால் ஏர் உழவர்கள் உழ மாட்டார்கள். மழைநீர் இல்லாமல் இருக்குமென்றால் இந்த உழவர்கள் வேலையின்றி சொங்கி இருப்பார்கள். இந்த உழவர்களுக்கு வேலை கொடுப்பதும் வருமானம் கொடுப்பதும் வளத்தை கொடுப்பதும் இந்த புயலும் பெருமழையும் தான். எனவே உழவர்களுக்கு உதவுவதோடு அல்லாமல் மனிதர்களுக்கு வேலை கொடுப்பதும் இந்த மழைதான் என்று வள்ளுவர் அருமையாக கூறியுள்ளார். 'வாரி வளம் பற்றி' என்றால் வருமானம் இன்றி போதல். மழை இன்றி போனால் வருமானமும் வளமையும் குன்றிப் போகும்.

'சாங்' என்கிற ஒரு நாட்டில் ஒரு மனிதர் தன் நிலத்தை உழுது கொண்டிருந்தபோது அவர் வயலில் நடுவில் இருந்த காய்ந்த மரமொன்றில் வேகமாக ஓடிவந்த முயல் ஒன்று மோதி கழுத்துத் திருகி இறந்து விழுந்தது. உடனே அவன் கலப்பையைத் தூக்கி எறிந்துவிட்டு, மறுபடியும் அதுபோல ஏதாவது முயல் வந்து மோதி இறந்து போகும் என எதிர்பார்த்துக் காத்திருந்து பட்டினியால் இறந்து போனான்.

சோம்பேறி தனத்தினால் உழவை மறந்தவன் பசியினால் சாவான்' என்பதற்கு மேற்கூறிய நிகழ்வு பொருந்துகிறது. இன்று வெள்ளை காலர் வேலை அல்லது வியர்வை சிந்தாத வேலை செய்ய மக்கள் விரும்புவதால் ஏர் கலப்பையையும், விவசாய நிலங்களையும் கைவிட்டவர்கள் பலர். விவசாயத்தில் நிலையான வருவாய் கிடைக்காது, வானம் பார்த்தே வருமானம் கிடைக்கும், வானம் பொய்த்தால் அனைத்தும் நஷ்டமாகும் என்று விவசாயத்தை மக்கள் கைவிட்டுவிட்டனர் எனலாம்.

உழவை மறந்தால் உயிர் வாழ்வது எப்படி? அடிப்படை தேவைகளில் முதலவதான உணவு இன்றி வாழ்வது சாத்தியமாகுமா? 'மரத்தை வச்சவன் தண்ணீ ஊற்றுவான்' என்ற திரையிசை நமக்கு நம்பிக்கை தருகிறது. தக்க காலத்தில் ஆண்டவர் மழையை பொழியச் செய்வார் என்ற நம்பிக்கையைத் தருகிறது.

ஏற்ற காலத்தில் மழையை நான் பெய்யச் செய்வேன். வயல் தன் பலன்களைத் தரும்: நிலத்தின் மரங்கள் தங்கள் கனிகளைத் தரும் – லேவி 26:4. நம்பிக்கையே வாழ்வை செழிக்கச் செய்கிறது.



# அகில உலக திருஅவைச் செய்திகள்

கடந்த செப்டம்பர் 24ம் தேதி பிரான்சிஸ் அசிசியாரின் பொருளாதாரம் என்ற அமைப்பைச் சேர்ந்த பொருளாதார நிபுணர்களை போப் அவர்கள் அசிசி நகரில் சந்தித்தார். அப்போது பொருளாதாரம் ஏழை மக்களை அரவணைத்ததாகவும், அவர்களின் மேம்பாட்டிற்காகவும் செயல்படவேண்டும் என்று கூறினார். மனிதர்கள் கடவுளின் சாயலில் படைக்கப்பட்டவர்கள். அவர்கள் பொருளாதாரத்தைத் தேடுவதற்கு முன், மனித உயிர்களின் மேன்மையையும், அர்தத்தையும் உணர்வது மிக முக்கியம் என்றும் அறிவுறித்தினார்கள்.

உக்ரைனில் உள்ள ரஷ்ய படையை வலுப்படுத்தும்விதமாக, ரஷ்யாவில் உள்ள இளைஞர்களை ராணுவத்தில் சேர ரஷ்யாவின் அதிபர், விளாடிமிர் புடின் அழைப்பு விடுத்துள்ளார். ஆனால் ரஷ்யாவில் உள்ள கத்தோலிக்க இளைஞர்கள் ரஷ்யாவிலிருந்து வெளியேறுகிறார்கள் என்ற ஒரு கத்தோலிக்க குரு கூறியுள்ளார். ரஷ்யாவில் உள்ள 20 சதவீத கத்தோலிக்கர்கள், உக்ரைனின் மீது ரஷ்யா நடத்தும் போர் தவறாது, தவிர்க்கப்பட வேண்டியது என்று கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

பிரேசிலிலிருந்து செயல்படும் ஷலோம் கம்யூனிட்டி இளைஞர்கள் மத்தியில் நற்செய்திப் பணியை மிக சிறப்பாக செய்துவருகின்றது. அவர்களின் இந்த நற்செய்திப் பணிகளை போப் அவர்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளார்கள். அவர்கள் அருட்சாதனங்களின் அடிப்படைகளையும், அவற்றின் சிறப்புகளையும் அதிகமாக இளைஞர்களுக்குப் போதிப்பதில் அதிக கவனம் செலுத்துகின்றார்கள். நற்கருளை, நற்கருணை ஆராதனை, ஒப்புரவு அருட்சாதனங்களை அதிகமான வலியுறுத்துவது மிகவும் பாராட்டுக்குரியது என்றும் பாப்பரசர் அவர்கள் பாராட்டியுள்ளார்கள். இந்த ஷாலோம் அமைப்பு பிரேசிலில் 1982ம் ஆண்டு துவக்கப்பட்டது. தற்போது 10.000க்கும் மேற்பட்ட மறைப்பணியாளர்கள் 33 நாடுகளில் பணி செய்கின்றார்கள்.

ஆம்ஸ்டர்டாம் மறைமாவட்டத்தில் 1980ம் வருடக் கணக்கின்படி மொத்தம்218 பங்குகள் இருந்தன. ஆனால் தற்போது 164 பங்குகளே இயக்கத்தில் உள்ளன. மேலும் ஆர்வமுள்ள கத்தோலிக்கர்களின் எண்ணிக்கைக் குறைவால் வருகின்ற 5 வருடங்களில் 60 சதவீத பங்குகள், அதாவது தற்போதுள்ள 164 பங்குகளில் 99 பங்குகள் மூடப்படும் என்று அந்த மறைமாவட்ட ஆயர் ஜான் ஹென்றிக் அவர்கள் கூறியுள்ளார். கொரோனா பெருந்தொற்று இத்தகைய நிலையை அதிவேகப்படுத்தியுள்ளது என்றும் கூறியுள்ளார்.

இந்தியாவில் உள்ள உத்தரபிரதேசத்தில், இரண்டு பள்ளி கிறிஸ்தவ ஆசிரியர்கள், ரசாங்கத்தின் மதமாற்றத் தடைச் சட்டத்திற்கு எதிராக செயல்பட்டதாக கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

# இந்த வார திருப்பலி வாசகக் குறிப்புகள்

## பொதுக்காலம் 28-ம் ஞாயிறு - 09.10.22

**09.10.2022 – ஞாயிற்றுக்கிழமை**

**முதல் வாசகம் :** 2 அரசர்கள் 5:14-17
**இரண்டாம் வாசகம் :** 2 தீமொத்தேயு 2:8-13
**நற்செய்தி :** லூக்கா 17:11-19

**10.10.2022 – திங்கட்கிழமை**

**முதல் வாசகம் :** கலாத்தியர் 4:22-24, 26-27,31-5:1
**நற்செய்தி :** லூக்கா 11:29-32

**11.10.2022 – செவ்வாய்க்கிழமை**

**முதல் வாசகம் :** கலாத்தியர் 5:1-6
**நற்செய்தி :** லூக்கா 11:37-41

**12.10.2022 – புதன்கிழமை**

**முதல் வாசகம் :** கலாத்தியர் 5:18-25
**நற்செய்தி :** லூக்கா 11:42-46

**13.10.2022 – வியாழக்கிழமை**

**முதல் வாசகம் :** எபேசியர் 1:1-10
**நற்செய்தி :** லூக்கா 11:47-54

**14.10.2022 – வெள்ளிக்கிழமை**

**முதல் வாசகம் :** எபேசியர் 1:11-14
**நற்செய்தி :** லூக்கா 12:1-7

**15.10.2022 – சனிக்கிழமை**

**முதல் வாசகம் :** எபேசியர் 1:15-23
**நற்செய்தி :** லூக்கா 12:8-12



"Let us Love, since that is what our hearts were made for"

- St. Therese of Lisieux